**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar

Miscellaneous } CC.No. 342/2010

Preliminary register

Sessions

Deposition Of Witness for { Prosecution PW 4

Defense

Court

Name திரு. நடராஜன்

Husband Name / Father's Name

Village

Taluk

Religion Muslim/Christian/Hindu

Age /2022

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of December 2022.

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உறவிட மருத்துவ அலுவலராக பணிபுரிந்து தற்போது ஓய்வுபெற்றுவிட்டேன். இதற்கு முன்பு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அவசர கிசிச்சைபிரிவில் மருத்துவராக பணிபுரிந்த போது 21.07.2010ம் தேதி மாலை 06.25 மணிக்கு மூலைக்கரைப்பட்டி அரசனார்குளம் வசித்து வரும் இளையபெருமாள் வயது 27/2010 த/பெ. வடிவேல்நாடார் என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவரை அவரது தாயார் மீனாட்சி என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார்

அவர் தன்னை இனம் தெரிந்து 2 நபர்கள் அவரது சிமெண்ட் புகை குழாயைகொண்டும் கை மற்றும் கல்லால் வீட்டில் வைத்து 27.07.2010 மாலை 03.00 மணியளவில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்து பார்த்தபோது சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தது 1) 5x1cm அளவுள்ள 3 நகத்தால் ஏற்பட்ட சிராய்ப்பு காயங்கள் வலது கன்னத்தில் குறுக்கே இருந்தது 2) அவர் தனது வலது தோள்பட்டையில் வலி இருப்பதாகவும் கையை அசைத்தால் வலி இருப்பதாக தெரிவித்தார் 3) 1x1cm அளவுள்ள சிராய்ப்பு காயம் இடது காலில் மேல்பகுதியில் இருந்தது. இடது கால் பாதத்தில் வலி இருப்பதாக தெரிவித்தார் 4)அவர் தனது உடல் முழுவதும் வலி இருப்பதாக கூறினார்

அவர் உள்நோயாளியாக சேர்க்கப்பட்டு அவருக்கு வலது தோள்பட்டை மற்றும் மார்பு பகுதியில் ஊடுகதிர் எடுக்கப்பட்டது அதில் வலது தோள்பட்டை எலும்புகள் கூட்டை விட்டு விலகி இருந்ததாக நுண்கதிர் நிபுணர் அறிக்கை அனுப்பியிருந்தார். அவருக்கு சிகிச்சையளித்து ஏற்பட்ட 2 வது காயம் கொடுங்காயம் என்றும் மற்ற காயங்கள் சாதாரண

காயங்கள் என்று சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் காயசான்றிதழ் **அசாஆ2** ஆகும்.

நான் மேற்படி நபர் உள்நோயாளியாக சிகிச்சைக்கு வந்தததை குறித்து மருத்துவமனையில் உள்ள புறக்காவல் நிலையத்திற்கு தகவல் அளித்தேன். நுண்கதிா் படத்தை குறித்து நுண்கதிா் பிரிவில்தான் மேற்படி நுண்கதிா் இருக்கும். மேற்சொன்ன முதல் காயம் கையால் அடிக்கும்போது நகம் கீரல் ஏற்பட  வாய்ப்புள்ளது. 2வது காயம் சிமெண்ட் குழாயால் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிஸாா் என்னை விசாரணை செய்தனா்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

மேற்சொன்ன காயங்கள் மோட்டா் வாகனத்தில் கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் 1வது காயம் ஏற்பட வாய்ப்பில்லை மற்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேற்சொன்ன காயங்கள் சொன்ன நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்போ பின்போ ஏற்படவாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.